இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

சகோதரர் சகோதரிகளே, இறுதியாக நான் உங்களுக்குச் சொல்வது: மகிழ்ச்சியாய் இருங்கள்; உங்கள் நடத்தையைச் சீர்ப்படுத்துங்கள்; என் அறிவுரைக்குச் செவிசாயுங்கள்; மன ஒற்றுமை கொண்டிருங்கள்; அமைதியுடன் வாழுங்கள்; அப்போது அன்பும் அமைதியும் அளிக்கும் கடவுள் உங்களோடு இருப்பார். தூய முத்தம் கொடுத்து ஒருவரை ஒருவர் வாழ்த்துங்கள். இங்குள்ள இறைமக்கள் அனைவரும் உங்களுக்கு வாழ்த்துக் கூறுகிறார்கள். ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அருளும் கடவுளின் அன்பும் தூய ஆவியாரின் நட்புறவும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக! (2 கொரி 13: 11-13)

# வறுமை என்ற கொள்ளைநோயை முடிவுறச் செய்வோம் - திருத்தந்தை

**வத்திக்கான்**: இந்த கோவிட்-19 கொள்ளை நோய் உருவாக்கியுள்ள வேதனை, கவலை மற்றும் சோதனைகளிலிருந்து நாம் விரைவில் மீண்டுவர தூய ஆவியார் உதவுவாராக.

கொள்ளைநோய் முடிவுற்றதற்குப் பின் வரும் வாழ்வு, ஒரே மாதிரியான வாழ்வாக அமையாது என்பதால், சமுதாயத்தில் மிகவும் நலிவுற்ற மக்களின் வாழ்வை முன்னேற்றுவதற்கு இந்த வாய்ப்பைப் பயன்படுத்துவோம் என்று, CHARIS எனப்படும் உலகளாவிய கத்தோலிக்க அருங்கொடை இயக்கத்திற்கு அனுப்பிய காணொளிச் செய்தி ஒன்றில் கூறியுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

பெந்தக்கோஸ்து பெருவிழாவின் திருவிழிப்பு நாளாகிய, மே, 30 கடந்த சனிக்கிழமை இரவு, அருங்கொடை இயக்கத்தினருக்கு காணொளிச் செய்தியொன்றை அனுப்பிய திருத்தந்தை, இயேசுவால் வாக்களிக்கப்பட்ட தூய ஆவியார், நம் ஒவ்வொருவரையும் புதுப்பிக்கவும், மனம் மாற்றவும், குணப்படுத்தவும் வருகிறார் என்று கூறியுள்ளார்.

### யாரும் தங்களையே மீட்க முடியாது

நாம் மற்றவர் மீது சுமத்தியுள்ள காயங்கள் உட்பட, நம் அனைத்துக் காயங்களைக் குணப்படுத்தவும், இயேசுவின் நற்செய்தியை அறிவிப்பதற்கு, நம்மை துணிவுள்ள மறைப்பணி சீடர்களாக மாற்றவும், தூய ஆவியார் நம்மிடம் வருகிறார் என்று திருத்தந்தை கூறினார்.

எக்காலத்தையும் விட இக்காலத்தில் நமக்குத் தூய ஆவியார் அதிகம் தேவைப்படுகிறார் என்று, இக்காணொளிச் செய்தியில் கூறியுள்ள திருத்தந்தை, கடுமையாய் காயமடைந்து, துன்புறும் ஓர் உலகில் நாம் வாழ்ந்து வருகிறோம் என்றும், இந்த துன்பம், நம் சமுதாயத்தில், கடும் வறுமையில் உள்ள மக்களில் அதிகம் உணரப்படுகின்றது என்றும் கூறினார்.

இப்போது நமது அனைத்து மனிதப் பாதுகாப்பும் அழிந்துவிட்டது என்றும்,



இயேசுவின் உடனிருப்பு இந்த உலகில் இருப்பதை நம் சான்று வழியாக வெளிப்படுத்த வேண்டிய அவசியம் உருவாகியுள்ளது என்றும், திருத்தந்தை எடுத்துரைத்துள்ளார்.

கொள்ளைநோய் வழியாக நாம் கற்றுக்கொண்ட பாடங்களுக்குத் திறந்த மனமும், இதயமும் கொண்டிருப்பதற்கு, தூய ஆவியாரின் வல்லமை நமக்குத் தேவைப்படுகின்றது என்றும், இந்த வல்லமையே சான்றுபகர்வதற்கு நமக்கு உதவுகின்றது என்றும் கூறியுள்ள திருத்தந்தை, நாம் அனைவரும் ஒன்றே என்பதையும், நம்மையே நாம் காப்பாற்றிக் கொள்ள முடியாது என்பதையும் பாடங்களாக நாம் கற்றுக்கொள்கிறோம் என்று தெரிவித்துள்ளார்.

### சமத்துவ சமுதாயம்

நாம் இந்த கொள்ளைநோயிலிருந்து மீண்டுவரும்போது, நாம் விட்டுவந்த பொருள்களை நம்மால் மீட்க இயலாது எனவும், ஏனெனில் எல்லாமே வித்தியாசமாக அமையும் எனவும் கூறியுள்ள திருத்தந்தை, நாம் எல்லாரும் ஒன்று சேர்ந்து, நீதியும், நியாயமும், கிறிஸ்தவப் பண்பும் நிறைந்த சமுதாயத்தைக் கட்டியெழுப்பவில்லையெனில், நாம் அனுபவிக்கும் துன்பங்கள் அனைத்தும் பயனற்றுப் போகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வொரு நாட்டிலும், நகரத்திலும், வறுமையின் கொள்ளைநோயை ஒழிப்பதற்கு நாம் உழைக்காவிட்டால், இந்தக் காலம் வீணான காலமாக இருக்கும் என்று எச்சரித்துள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தற்போதைய கொள்ளைநோய் போன்று. மனித சமுதாயம் எதிர்கொள்ளும் மாபெரும் சோதனைகளிலிருந்து, நம்மில் எவருமே, அதற்கு முன்னைய நிலைபோல் மீண்டுவர இயலுமா என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளார்.

### தூய ஆவியாரின் உதவி

எனவே, நாம் தூய ஆவியாருக்கு நம் இதயங்களைத் திறப்போம், அதன் வழியாக, அவர் நம் இதயங்களை மாற்றுவார் மற்றும், சிறந்த உலகை அமைப்பதற்கு நமக்கு உதவுவார் என்று CHARIS இயக்கத்திற்கு அனுப்பிய காணொளிச் செய்தியில் கூறியுள்ள திருத்தந்தை, இந்த கோவிட்-19 கொள்ளைநோய் உருவாக்கியுள்ள வேதனை, கவலை மற்றும் சோதனைகளிலிருந்து நாம் விரைவில் மீண்டுவர தூய ஆவியார் உதவுவாராக என்று குறிப்பிட்டுள்ளார்.

பல்வேறு கத்தோலிக்க அருங்கொடை இயக்கங்களுக்கு இடையே ஒன்றிப்பையும், குழும உணர்வையும் வளர்க்கும் நோக்கத்தில், பொதுநிலையினர், குடும்பம் மற்றும், வாழ்வு திருப்பீட அவை, 2018ம் ஆண்டில், CHARIS உலகளாவிய அமைப்பை உருவாக்கியது என்பது குறிப்பிடத்தக்கது.

*மேரி தெரேசா: வத்திக்கான் செய்திகள்*

# பினாங்கு, தூய ஆவியார் பங்கில் தூய ஆவியார் பெருவிழா கொண்டாடப்பட்டது

**பினாங்கு:** இங்கு அமைந்திருக்கும் தூய ஆவியார் பேராலயம் இவ்வாண்டு அனைவருக்கும் சிறப்பு வாய்ந்ததாக அமைந்தது. ஏனெனில் பங்கு மக்கள் தங்கள் திருப்பலியை அவர்களது வீடுகளின் "மேல் அறையில்" கொண்டாடினர். பங்குத் தந்தை அருட்தந்தை ஜோகிம் ரோபர்ட், அவரது செய்தியில் மிகவும் பொருத்தமாக, "நாம் பங்கு பேராலயத்தில் உடல் ரீதியாக ஒன்றுகூட முடியாத நிலையில், அனைவரும் வழிபாட்டில் ஆவியிலும், அன்பிலும் ஒன்றுபட்டுள்ளோம். 'அஞ்சாதே, நான் உன்னுடன் இருக்கிறேன்' (எசாயா 41:10) என்ற உறுதி மொழியால் நாம் ஆறுதலடைகிறோம். இது பங்கு தூரநோக்கின்படி - "பன்முகத் தன்மையில் ஒற்றுமை" எனும் கொள்கையை உண்மை நிலைப்பாட்டிற்குக் கொண்டு வந்துள்ளது என்றார்.

.பெந்தெகொஸ்தே பெருவிழாவுக்கானத் தயாரிப்பாக, மே 22 முதல் மூன்று நாள்கள் பங்கு மக்கள் தூய ஆவியாருக் கான செபமாலையை இல்லம் மற்றும் குடும்ப வாரியாக ஒப்புக்கொடுக்கத் தொடங்கினர். இது இயங்கலை (online) வீடியோ மூலம் வழிநடத்தப் பட்டது. .

அடுத்த மூன்று நாள்களுக்கு தூய ஆவியாருக்கு நவநாளோடான திருப்பலிகள் கொண்டாடப்பட்டு ஒளிபரப்பப் பட்டது. மூன்று நாள்களுக்கான கருப் பொருள்கள் பின்வருமாறு:

1."நம்முடைய கனிகளால் நாம் அங்கீ கரிக்கப்படுகிறோம்" (மத் 7:16)

2. நாம் பலராயிருந்தாலும் கிறிஸ்துவோடு இணைந்திருப்பதால் ஒரே உடலாய்




இருக்கிறோம்" (உரோ 12:5)
3.ஆண்டவர் மேல் உன் கவலையைப் போட்டுவிடு; அவர் உனக்கு ஆதரவளிப்பார்; (திபா. 55:22)

அருட்தந்தை ஜோக்கிம் அவரது திருப்பலியில், "இந்த கொண்டாட்டங்கள் அர்த்தமுள்ளவை, நிச்சயமாக அனைவருக்கும் மறக்க முடியாதவையாக இருக்கும். நாம் எங்கிருந்தாலும் நம் அனைவரையும் ஒன்றிணைத்து, நம் பிணைப்பை வலுப்படுத்தும் ஒரு கொண்டாட்டமாக இது அமைந்துள்ளது. தூய ஆவியார் உண்மையிலேயே உயிரோடு இருக்கிறார், ஒவ்வொரு சூழ்நிலையிலும் அவர் செயல்படுகிறார்" என்று கூறி, பங்குத் திருவழாவின் வெற்றிக்கு உதவிகரம் நீட்டிய அனைவருக்கும் நன்றி மாலை சூட்டினார். இவ்வாறு இவ்வாண்டுக் கொண்டாட்டம் இனிதே முடிவுற்றது.

# கத்தோலிக்கத் திருஅவை சட்டம் எத்தகைய நோன்பை வலியுறுத்துகிறது?

**சென்ற வாரத் தொடர்ச்சி...**

### திருஅவைச் சட்டம் 1252

திருஅவைச் சட்டம் 1252-ல் கண்டுள்ளப்படி, பதினான்கு வயதுக்கு மேற்பட்டோர் இந்த நோன்பு ஏற்க வேண்டிய காலத்தில் நோன்பு இருக்கப் பணிக்கப்படுகிறார்கள். இது அறுபது வயதுவரைக்குமான ஓர் அழைப்பாகும். பதினான்கு வயதுக்குக் கீழ்ப்பட்டோருக்கு பெற்றோர் நோன்பின் அவசியம் மற்றும் நோக்கத்தை விளக்கி போதித்து வரவேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

### திருஅவைச் சட்டம் 1253

திருஅவைச் சட்டம் 1253-ல் பதிவு செய்துள்ளப்படி, நம் நாட்டின் ஆயர் பேரவையின் ஆலோசனை அல்லது வழிகாட்டுதலின் கீழ், மாமிச உணவை கைவிடுவதற்கு ஈடாகச் சில அறப்பணிகளையும் பக்தி முயற்சிகளையும் மேற்கொள்ளலாம். எடுத்துக்காட்டாக, ஆதரவற்றோர் இல்லத்தில் உள்ளோருக்கு இலவசமாக உணவு பரிமாறலாம்; மருத்துமனையில் நோயாளிகளைச் சந்தித்து ஆறுதல் கூறலாம், இறைவேண்டல் செய்யலாம், அவர்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்கள் வாங்கித் தரலாம்.

மேலும், சிலுவைப்பாதை, செபமாலை நற்கருணை ஆராதனை போன்ற பக்தி முயற்சிகளில் சமூகமாக ஈடுபடலாம், பிறருக்காக இறைவேண்டல் செய்யலாம்.

### விபூதி புதன் & பெரிய வெள்ளி

இவ்விரு நாள்களிலும் ஒருசந்தி மற்றும் சுத்தபோசனமும் அவசியமாக உள்ளது. மாமிசமில்லா ஒருவேளை உணவை ஏற்க வேண்டும். சிலர் இதை விரதம் என்றுகூட சொல்கிறார்கள். நமது நம்பிக்கையின் அடிப்படையில் நோன்பு என்பதே பொருத்தமானது.

நாம் இங்கு சைவ உணவு என்று குறிப்பிடவில்லை. பொதுவாக இந்து சமயத்தவரிடையே சைவம் என்றால் சிவ சம்பந்தமுடையது என்பது பொருள். எனவே, சைவம் என்று சொல்லி பிறரைக் குழப்பக்கூடாது. நமது பார்வையில் சைவம் என்றால் மரக்கறி உணவு. அதற்கு மேல் ஒன்றுமில்லை.

தவக்காலத்தில் நம்மில் சிலர் 40 நாள்களும் நோன்பு இருப்பர். வேறு சிலர் 40 நாள்களும் மரக்கறி உணவு ஏற்பர். இது தனிப்பட்டோரின் விருப்பம். இதை ஓர் ஒடுக்கம் அல்லது தியானப் பயணமாக ஏற்கலாம். இவை திருஅவையின் சட்டங்களுக்கு உட்பட்டவை அல்ல. திருஅவையின் சட்டம் இத்தகைய நோன்பை வலியுறுத்தவில்லை என்பதை நினைவில் கொள்வோம்

*ஆர்.கே.*

## திருத்தந்தை துவக்கி வைத்த மருத்துவ உதவி வாகனப்பணி



வத்திக்கானின் மருத்துவ உதவி ஊர்தி ஒன்றை, உரோம் நகரில் தெருவில் வாழ்கின்ற ஏழைகளுக்கென அர்ப்பணித்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

வத்திக்கான் பதிவு எண்ணுடன், வத்திக்கானிலுள்ள மருத்துவ உதவி வாகனங்களுடன் இயங்கவுள்ள இந்த ஊர்தி, உரோம் நகரில் தெருவில் வாழ்கின்ற ஏழைகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. தெருவாழ் ஏழைகளுக்கு மருத்துவ உதவிகளை வழங்க வேண்டும் என்ற நோக்கத்தில் திருத்தந்தையால் இப்பணி தொடங்கப்பட்டுள்ளது.

# அர்ப்பணிக்கப்பட்ட கன்னியர் இரக்கத்தின் பெண்களாக செயலாற்ற வேண்டும்

**வத்திக்கான்:** திருத்தந்தை புனித 6-ஆம் பவுல் அவர்களின் அனுமதியுடன், 1970-ஆம் ஆண்டில், அர்ப்பணிக்கப்பட்ட கன்னியர் வழிபாட்டுமுறையின் திருத்தியமைக்கப்பட்ட ஆவணம் வெளியிடப்பட்டது

தங்களது கன்னிமையைக் கடவுளுக்கு அர்ப்பணித்து வாழும் பெண்கள் அனைவரும், துன்புறும் மக்களுக்கு மிக நெருக்கமாக இருக்கவும், அவர்களை கிறிஸ்துவிடம் அழைத்துவர உழைக்கவும் வேண்டும் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அழைப்பு விடுத்தார்.

கன்னியர், தங்கள் வாழ்வை கடவுளுக்கு அனைவருக்கும் வாழ்வின் முழுமையை வழங்கும் நற்செய்தியை அறிவிப்பதில் உறுதியாய் இருக்கவும் கேட்டுக்கொண்டார்.

நகரங்களில் நிலவும் தனிமையைக் குறைப்பதற்கு, உண்மையான உறவுகளை உருவாக்குமாறும், அதிகாரங்களில் நிலவும் உரிமைமீறல்களைத் தடுத்துநிறுத்துவதற்கு, ஞானம், பிறரன்பு, துன்பங்களை மேற்கொள்ள சக்தி போன்றவற்றைக் கொண்டிருக்குமாறும் திருத்தந்தை மேலும் கூறினார்.

இத்தகைய ஒரு வாழ்வுமுறை, சொந்த திறமைகளால் அல்ல, மாறாக, கடவுளின் இரக்கத்தால் வழங்கப்பட்டதாகும் என்றும், இக்கன்னியர், கிறிஸ்துவின் மணமகளாம் திருஅவையின் முகத்தைப் பிரதிபலிப்பவர்களாக, தங்கள் வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும் என்றும், திருத்தந்தை ஊக்கப்படுத்தியுள்ளார்.



*அர்ப்பணிக்கப்பட்ட கன்னியர் வழிபாட்டுமுறை (Agenzia Romano Siciliani)*

அர்ப்பணிக்கும் வழிபாட்டுமுறையின் திருத்தியமைக்கப்பட்ட ஆவணம் வெளியிடப்பட்டதன் ஐம்பதாம் ஆண்டின் நிறைவாக, ஜூன் 01, இத்திங்களன்று, அர்ப்பண வாழ்வு வாழ்கின்ற கன்னியர் அனைவருக்கும் செய்தி அனுப்பிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அக்கன்னியர், மனித சமுதாயத்தில் இரக்கத்தின் பெண்களாக, சிறப்பாகப் பணியாற்றுமாறு கேட்டுக் கொண்டார்.

நம்மைச் சுற்றி நிகழும் அனைத்தும் உங்களைத் தொந்தரவு செய்கின்றது என்று அவற்றிற்கு உங்கள் கண்களை மூடிக் கொண்டிராமலும், அவற்றினின்று தப்பித்துச் செல்லாமலும் இருங்கள் என்று, அந்தக் கன்னியரை வலியுறுத்திய திருத்தந்தை,

அர்ப்பணிக்கப்பட்ட பெண்கள் என்பவர்கள், திருமணமாகாமல், தங்களின் கன்னிமையை நிரந்தரமாக கடவுளுக்கு அர்ப்பணித்து வாழ்பவர்கள். இன்று உலகில் ஐயாயிரத்திற்கும் அதிகமான, அர்ப்பணிக்கப்பட்ட கன்னியர் உள்ளனர் என்று, துறவியர் பேராயத்தின் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.

மேரி தெரேசா: வத்திக்கான் செய்திகள்

# ஓரிறை கொள்கை நம்பிக்கையின்அச்சாணி

இந்த ஞாயிறு, நமது நம்பிக்கையின் அச்சாணியான மூவொரு கடவுள் நம்பிக்கையில் ஒளிபெற்று வாழ அழைக்கிறது. மூவொரு கடவுள் (திரித்துவம்) என்பது காலத்தாலும் மனித அறிவாற்றலாலும் அறிய முடியாத மாபெரும் மறைபொருள். நமது திருஅவை தந்தையர்கள் பலர் இந்த மறைபொருளுக்கு விளக்கம் அளிக்க முற்பட்டிருந்தாலும் அதனை முழுமையாக அறிந்தவர்களாக நாம் இல்லை.

மூவொரு கடவுள் தத்துவத்தை விளக்குவதற்கு தண்ணீர், முட்டை, ஆப்பிள் என பல்வேறு எடுத்துக்காட்டுகளை முன்வைப்பர். தண்ணீர் பற்றிய எடுத்துக் காட்டைக் காண்போம். சாதாரண வெப்ப நிலையில் திரவமாக இருக்கும் தண்ணீர், சூடான வெப்ப நிலையில் ஆவியாக மாறுகிறது. மிகவும் குறைந்த வெப்ப நிலையில் பனிக்கட்டியாக மாறுகிறது. அவ்வாறே கடவுள், தந்தையாகவும் மகனாகவும் தூய ஆவியாராகவும் இருக்கிறார் எனக் கூறுவர். தண்ணீர், ஆவி, பனிக்கட்டி ஆகிய மூன்றும் அடிப்படையில் ஒன்றாக இருந்தாலும், தண்ணீர் ஆவியாகவும் பனிக்கட்டியாகவும் மாறும் போது அவற்றின் மூலக்கூறு (molecule) தன்மையும் வேறுபடுகின்றன. எனவே இந்த எடுத்துக்காட்டும் பொருந்தாது மூவொரு கடவுள் என்பது மூன்று ஆள்கள், மூன்று கடவுளல்ல. யாதொரு வேறுபாடும் இன்றி மூவருக்கும் ஒரே அன்புறவு, ஒரே ஞானம், ஒரே திருவுளம், ஒரே வல்லமை, ஒரே கடவுள் தன்மை உள்ளதால் மூவரும் ஒரே கடவுள். ஒரே தன்னமை, ஒரே தெய்வீகம் கொண்டவர்கள், நிலையானவர்கள். *(கத்தோலிக்கத் திருஅவை மறைக் கல்வி எண் 255 & 257).*

திருஅவை தொடங்கப்பட்டு முதல் 300 ஆண்டுகளில் மூவொரு கடவுள் பற்றிய சர்ச்சை எழுந்தது. இதற்கு தீர்வு காணும் வகையில் கிபி 325-ஆம் ஆண்டு நிசேயா பொதுச்சங்கம் கூடியது. கிபி 381-ஆம் ஆண்டு கூடிய முதலாவது கான்ஸ்தாந்திநோபுள் பொதுச்சங்கமும் கிபி431-ஆம் ஆண்டு கூடிய எபேசு பொதுச்சங்கமும் இதையே விவாதித்தன. தந்தை, மகன், தூய ஆவியார் மூவரும் ஒரே கடவுள், ஒரே தன்மை, ஒரே சுபாவம் கொண்டவர்கள், ஆனால் மூன்று ஆள்களாக இருக்கின்றனர் என இந்த பொதுச் சங்கங்களின் இறுதியில் திருத்தந்தை முதலாம் லியோ அறிவித்தார்.

இன்றைய நற்செய்தியில் (யோவான் 3) வரும் யூத சமய மன்றத் தலைவர்களில் ஒருவரும் பரிசேயருமான நிக்கதேமுவிற்கே ஓரிறை பற்றிய படிப்பினை புரியாமல் இயேசுவிடம் வினவுகிறார். "காற்று விரும்பிய திசையில் வீசுகிறது. அதன் ஓசை கேட்கிறது. ஆனால் அது எங்கிருந்து வருகிறது என்றும் எங்குச் செல்கிறது என்றும் உமக்குத் தெரியாது". உணரக் கூடிய காற்றுப் பற்றியே புரியாத போது புரியாதப் புதிராக இருக்கும் மூவொரு இறை பற்றி அறிந்து கொள்வது சிரமமே. ஆனால் மண்ணுலகில் பிறந்து, இறந்து, உயிர்த்த இயேசு (மகன்) மீது நம்பிக்கை கொண்டால் போதும் நிலைவாழ்வு பெறுவோம்(16). ஏனெனில், "நான் தந்தையுள் இருக்கிறேன்; தந்தை என்னுள் இருக்கிறார்"(யோவான்14:10) என இயேசு கூறுவது தந்தைக்கும் மகனுக்குமிடையே உள்ள ஒன்றிப்பை எண்பிக்கிறது.

இவர்களின் இருவரிலிருந்து புறப்படும் தூய ஆவியாரும் கடவுள், மூன்றாம் ஆள் (கத்தோலிக்கத் திருஅவை மறைக்கல்வி எண்.246). கிபி1438-ஆம் ஆண்டு நடைபெற்ற ஃபிலொலரன்ஸ் பொதுச்சங்கம் இதனை உறுதிப்படுத்தி, இவர்கள் மூவரின் தன்மையும் ஒன்று என அறிவித்தது.

இந்த நம்பிக்கை அறிக்கையை, இஸ்ராயேல் மக்கள் சார்பாக ஒப்புவிக்கிறார் மோசே, முதல் வாசகத்தில். படைப்பின் தொடக்கம் முதல் இருக்கும் மூவொரு கடவுள், அன்பும், இரக்கமும், பரிவும் உள்ளவர் என மோசே பறைசாற்றுகிறார். எனவே ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அருளும், கடவுளின் அன்பும், தூய ஆவியாரின் நட்புறவும் நம்மோடு என்றும் இருக்க வேண்டுமென என புனித பவுல் இரண்டாம் வாசகத்தில் விரும்புகிறார்.

ஆகவே, மூவொரு இறைவனின் பெருவிழாவைக் கொண்டாடும் இந்த நாளில், அவர்களிடம் இருக்கும் அன்பையும், அவர்கள் நம்மீது செலுத்தும் அன்பினையும் உணர்ந்துகொள்வோம். அது மட்டுமல்லாமல், இந்த நாளில் அவர் நமக்கு விடுக்கின்ற நற்செய்தி அறிவிப்புப் பணியினை சிறப்புடன் செய்வோம். அதன் வழியாக இறையருளை நிறைவாய் பெறுவோம். தந்தை, மகன், தூய ஆவியாரின் அருளாசியில் நிலைத்திருப்போம்.

*-அந்தோணி இன்னாசி, ஸ்ரீ கெம்பாங்ஙான்*

**மூவொரு கடவுள்**

விப 34: 4b-6, 8-9
தானி (இ) 1: 29ac. 30,31. 32,33 .
2கொரி13: 11-13
யோவான் 3: 16-18

**ஞாயிறு வாசகம்: ஆண்டு I**
**வாரநாள் முதல் வாசகம்: 2**
**திருப்புகழ் மாலை : மூவொரு கடவுள்**